# விவிலிய வாரம்

## 20-26 செப்டம்பர் 2021

# விவிலிய ஞாயிறு

## 26.09.2021

## இறைவார்த்தை - சமூக சகோதரத்துவத்திற்கு ஓர் அழைப்பு

**விவிலிய மாதம் சிறப்புற திட்டமிடுதல் : 22, 29.08.2021**

**விவிலிய வாரம் சிறப்புற செப நாள் : 01-08.09.2021**

அன்பிற்கு இனியவர்களே!

அன்பார்ந்த வணக்கங்கள்.

வாழ்வுக்கான வாழ்த்துக்கள்.

‘தனித்திரு... விலகியிரு... வீட்டிலேயே இரு’ என்ற வார்த்தைகளைக் கடந்த ஒன்றரை வருடமாக அதிகமாகவே கேட்கின்றோம். கொரோனா தொற்றுச் சூழலில் அரசு நமக்கு வழிகாட்டுகிறது. நன்றி. இந்த தொற்றுக்கு முன்பாகவே ஏறக்குறைய நாம் நமது சமூகவியல் வாழ்வில் தனித் திருந்தோம்... விலகியிருந்தோம்... வீட்டிலேயே இருந்தோம். இதுதான் 21-ஆம் நூற்றாண்டின் வாழ்வு முறையாகிவிட்டதோ! என்ற வருத்த உணர்வுகள் ஏராளம் உண்டு.

இன்றைய உலகு மிக அதிகமான பாதுகாப்பையும், மிக அதிகமான சொகுசு வாழ்க்கையையும் தேடுகிறது. இதற்காக மனிதன் தேர்ந்தெடுத்திருக்கும் ஓர் ஆயுதம் ‘தனிமை’. தனித்திருந்தால் எனக்கு நிம்மதி; திருமணம் ஆகவில்லை என்றால் நிம்மதி; குறைவாக குழந்தைகள் அல்லது குழந்தைகளே இல்லையென்றால் நிம்மதி; எனவே தனிமைமீது ஒரு நாட்டம், ஒரு தேடல். அடுக்கு மாடி குடியிருப்புகள்; ஆனால் அயலார் ஒருவர் குடியிருக்கிறார் என்பதே தெரியாது. பத்துவருடம் ஒரே மாடியில் குடியிருந்தாலும் இயற்கை சீற்றத்தில் - வெள்ளப் பெருக்கில் வெளிவரும்போதுதான் ‘ஹலோ’ சொல்லி அறிமுகமாகும் பரிதாப நிலை. அடுக்குமாடி குடியிருப்புகளில் முகவரிகள் தெளிவாக உள்ளன. ஆனால் முகங்கள் தான் தெரிவதில்லை.

இத்தகைய ஒரு வாழ்வை இன்றைய நாகரிகம் என்று சொல்லிக் கொள்வதில் ஓர் இறுமாப்பு; இவைகள் எல்லாமே போலிகள்; நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருக்கின்றோம். எதார்த்தங்களை, இயல்புகளை சந்திக்க விரும்புவதை மனிதர்கள் நாம் தவிர்க்கின்றோம். எனவே இத்தகைய ‘தனிமை’ கலாச்சாரத்தில் தப்பித்துக் கொள்கின்றோம். எனவே நொண்டிகளாக இருந்து நொண்டி சாக்குப் போக்குகளைத் தேடுகின்றோம்.

கிறிஸ்தவர்களின் புனித நூல் விவிலியம். இது மனிதனை கூறு போடாமல் கூடிவரச் செய்யும் இறைவார்த்தைகளைக் கொண்டுள்ளது. விவிலியத்தில் ஒவ்வொரு புத்தகத்தையும் அலசி ஆராய்ந்து பார்த்தால் மனிதர்கள் நாம் ஒரு சகோதரத்துவ வாழ்வுக்கு அழைக்கப் பட்டவர்கள் என்பதையே உணர்த்தும்.

‘மனிதர்களை விட்டுவிட்டுப் பொருள்களைத் தேடுகின்றோம். இதயங்களை சம்பாதிப்பதற்குப் பதிலாக இருப்பவைகளையே கூட்டுகின்றோம். ஆனால், ஒன்று மட்டும் உண்மை. ‘விலைமதிக்க முடியாதவை நம்மிடம் இருப்பவை அல்ல, நம்மிடம் இருப்பவர்கள் தான் என்ற வாழ்வின் இலக்கை நோக்கிப் பயணிப்போம்.

கொரோனா தொற்றுச் சூழலில் ‘நான்’ மட்டும் தனித்து வாழ முடியாது; சேர்ந்துதான் வாழ வேண்டும் என்பதைக் கற்றுக் கொண்டோம். பிறருடைய துன்பங்களில், வாழ்வு அனுபவங்களில் பங்கெடுக்க கொரோனா நமக்கு நிறையவே கற்றுத் தந்திருக்கிறது. இன்னும் இந்த சகோதரத்துவ உணர்வு வலுப்பெற, வளம்பெற இறைவார்த்தை நம்மை உந்தித் தள்ள வேண்டும். செப்டம்பர் மாதம் நாம் கொண்டாடும் விவிலிய மாதம், விவிலிய வாரம், விவிலிய ஞாயிறு இந்த சிந்தனைகளையே நமக்கு அடிக்கடித் திருப்பித் தர வேண்டும். அதற்கேற்றாற்போன்று விவிலியத்தை இன்னும் ஆழமாக வாசிக்க வேண்டும். இறைவார்த்தை - நம்மை சமூக சகோதரத்துவ வாழ்வுக்கு அழைத்துச் செல்லட்டும். .தனித்திருந்தாலும் - தனிமையில் இல்லை; விலகியிருந்தாலும் விலக்கப்படவில்லை; வீட்டிலிருந்தாலும் விட்டுவிடப்படவில்லை என்பதே நமது சொல்லும் செயலுமாகட்டும்.

எமது எல்லா பணிகளுக்கும் அன்பான அணுகுமுறையாலும், நேர்மையான அடிப்படையாலும் எம்மை வழிநடத்தும் தமிழக விவிலிய பணிக்குழுவின் தலைவர் பாசமிகு **ஆயர் M. தேவதாஸ் அம்புரோஸ்** அவர்களுக்கு எமது நன்றியை மிகத் தாழ்மையாக தெரிவிக்கின்றோம். எமது மைய இயக்குநர் **அருள்பணி. ம. பிலோமின்தாஸ்** அவர்களுக்கும், எமது ஏனைய அருள்பணி யாளர்கள், அருள்சகோதரிகள் அலுவலகப் பணியாளர்கள் மற்றும் முப்பணி மையப் பணியாளர்கள் அனைவருக்கும் உளம் நிறை நன்றிகள். விவிலிய மாதம், வாரம், ஞாயிறு சிறப்புற எமது வாழ்த்துகள்.

**திண்டிவனம்**
04.08.2021

**என்றும் அன்புடன்**
**அருள்பணி. M. உபால்டு**
*பொதுச்செயலர்,*
*தமிழக விவிலியப் பணிக்குழு,*
*முப்பணி மையம், திண்டிவனம்*

## உங்கள் கவனத்திற்கு. . .

1. இக்கையேடு உங்களுக்கு உதவிடும் ஒரு வழிகாட்டி மட்டுமே. தாங்கள் விரும்பினால் படைப்பாற்றலுடன் பலவற்றை முறையாகத் தயார் செய்து, பங்குத் தந்தையின் அனுமதியோடு தங்கள் பகுதியில் விவிலிய வாரத்தைச் சிறப்பிக்கலாம்.
2. வசதிக்கும் சூழலுக்கும் ஏற்ப, சிறப்பிக்கும் குழுக்களையும் மாற்றி அமைத்துக் கொள்க.
3. திருப்பலிக் கொண்டாட்டம் இடம் பெறாத சூழல்களில் (வார நாள்களில்) விவிலிய வழிபாடுகளை நடத்துவதற்கு வழிகாட்டலாம்.
4. கிளைப் பங்குகளிலும் சிறப்பு ஏற்பாடுகள் செய்து விவிலிய வாரத்தைக் கொண்டாடுவது வரவேற்கத்தக்கது.
5. தங்கள் பகுதியில் இடம்பெறும் விவிலிய வாரச் சிறப்பு நிகழ்வுகளை எம்முடன் பகிர்ந்துகொள்க (புகைப் படங்கள் மற்றும் செய்திகளை அனுப்பி வைக்கவும்). Whatsapp மூலம் அனுப்புக.
6. விவிலிய ஞாயிறு சிறப்புக் காணிக்கையை மறைமாவட்டச் செயலர் வழியாகத் தமிழக முப்பணி நிலைய இயக்குநருக்கு அனுப்பி உதவிடுக.

## நன்றிகள். . .

விவிலியப் பிரதிகள் திண்டிவனம், முப்பணி நிலையத்திலும் மறைமாவட்ட அருள்பணி நிலையங்களிலும் விற்பனைக்குக் கிடைக்கும். வாங்கிப் பயன் பெறுக.

மறைமாவட்ட அளவில் விவிலியப் பணிகளைத் தமிழக விவிலியப் பணிக்குழுவோடு இணைந்து ஆற்றும் மறைமாவட்ட செயலர் தந்தையர்களுக்கும், விவிலியப் பணியாற்றும் இருபால் துறவியருக்கும், தன்னார்வமாய் விவிலிய இறைப்பணி செய்யும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி.

# பொருளுள்ள கொண்டாட்டத்திற்கு. . .

தமிழக ஆயர் பெருமக்களின் ஆசியுடன் 1974–ஆம் ஆண்டு முதல் 'விவிலிய ஞாயிறு' தமிழ்நாட்டில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. தொடக்கத்தில் ஒரு நாள் கொண்டாட்டமாக மட்டும் இருந்த விவிலிய ஞாயிறு, 1988 முதல் விவிலிய வாரமாகவும், இன்று பல பங்குகளில் விவிலிய மாதமாகவும் செப்டம்பர் மாதம் முழுவதும் கொண்டாடப்படுகின்றது. நம் தமிழக இறைமக்கள் இறைவார்த்தையின்மீது கொண்டுள்ள பேரார்வமும், அவர்கள்மீது இறைவார்த்தை கொண்டுள்ள தாக்கமும் நம் எல்லாருக்கும் மகிழ்ச்சியை அளிக்கின்றன. இந்தியத் திரு அவையின் விவிலியப் பணிகளில் தமிழகம் முன்னணியில் இருப்பதைக் கண்டு உள்ளம் பெருமிதம் அடைகின்றது. இதற்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

தமிழகத் திருஅவையில் இவ்வாண்டு 20.09.2021 முதல் 26.09.2021 வரை விவிலிய வாரம் கொண்டாடப்படுகின்றது. எனவே, நம் பங்குகளிலும், கிளையூர்களிலும், அனைத்து நிறுவனங்களிலும் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு, விவிலிய வாரத்தைக் கொண்டாடத் தமிழக விவிலியப் பணிக்குழுவும் உங்கள் மறைமாவட்ட விவிலியப் பணிக்குழுவும் உங்களுக்கு அன்புடன் அழைப்பு விடுக்கின்றன. உங்களுக்கு உதவுவதற்குச் சில பரிந்துரைகள் தரப்படுகின்றன:

## 1. செயல்திட்டங்களை உருவாக்குதல்

### அ. ஆகஸ்டு மாதம் 22, 29 (ஞாயிறுகள்) செய்ய வேண்டியவை:

விவிலிய வாரம் முழு வெற்றி பெற, பங்கு அருள்பணியாளர், இருபால் துறவியர், ஆசிரியர்கள், வேதியர், கோவில் பணியாளர்கள், இளையோர், பங்கு விவிலியப் பணிக்குழு, பங்குத் திருவழிபாட்டுப் பணிக்குழு, பக்த சபையினர், அன்பியப் பொறுப்பாளர்கள் ஆகியோர் இணைந்து செயல்படுதல் அவசியம்.

- *விவிலிய வார விழாக் குழுவை அமைத்தல்*
- *திட்டம் தீட்டுதல்*
- *பொறுப்புகளைப் பகிர்ந்துகொண்டு, தயாரிப்புப் பணிகளில் ஈடுபடுதல்*

### ஆ. செப்டம்பர் மாத முதல் ஞாயிறு செய்ய வேண்டியவை

பங்கில் விவிலிய வாரம் சிறப்புற அமைய இன்று திருப்பலியில் செபிக்கப்படும்.

20.09.2021 திங்கள் முதல் 26.09.2021 ஞாயிறு வரை ஒரு வாரம் முழுவதும் நமது பங்கில் விவிலிய வாரம் சிறப்பாகக் கொண்டாடப்படும் என்பதைத் திருப்பலியில் அறிவித்தல். வார நாள்களில் நடைபெற உள்ள விவிலிய நிகழ்வுகளையும் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களையும் விளக்கிக் கூறுதல்; யார் யார் பொறுப்பாளர் என்பதையும் அறிவித்தல். விவிலிய வாரத்தின் எல்லா நிகழ்ச்சிகளிலும் அனைவரும் ஆர்வமுடன் பங்கேற்கத் தூண்டுதல்.

## விவிலிய மாதம், வாரம், ஞாயிறு

1. *சுவரொட்டிகள் தயார் செய்து ஆங்காங்கே மக்கள் பார்வைக்கு வைத்தல் (முடிந்தவரை பிளாஸ்டிக் தவிர்க்கவும்).*
2. *பதாகைகள் தயார் செய்து கையில் ஏந்தலாம்; ஆலயத்தில் தொங்கவிடலாம்.*
3. *செப்டம்பர் மாதம் முழுவதும் திருப்பலிக்கு முன்பும் பின்பும் ஆலயத்தில் ஒலிபரப்பப்படும். பாடல்கள் இறைவார்த்தை மையப் பாடல்களாக பார்த்துக் கொள்ளலாம். VBS பாடல்களைப் பயன்படுத்தலாம்.*
4. *விவிலிய வாரம் முழுவதும் (ஞாயிறு தவிர) மாலை நேர திருப்பலிகள் வைக்கலாம். கொடுக்கப்பட்டிருக்கும் சிந்தனைகளின் அடிப்படையில் திருப்பலி, பகிர்வுகள் நடைபெறலாம். அந்தந்த குழுக்கள் திருப்பலியை சிறப்பிக்கலாம்.*
5. *விவிலிய ஞாயிறு மற்றும் விவிலிய வார திருப்பலிகளில் விவிலியம் / புதிய ஏற்பாடு இவைகளை காணிக்கையாகச் செலுத்தி அவைகளை ஏழைகளின் / சிறப்பு மக்களின் பயன்பாட்டிற்கு இலவசமாக வழங்கலாம்.*
6. *விவிவிலிய கண்காட்சிகள் பங்குகளில் ஏற்படுத்தி சிறப்புறச் செய்யவும். இந்த விவிலியக் காட்சிகள் பங்குகளில் அல்லது தளங்களின் மைய இடங்களில் நிரந்தரமாக இருக்கலாம். இல்லையெனில் ஒரு மாதம் தற்காலிகமாகவும் வைக்கலாம்.*
7. *விவிலியக் கட்டுரைகள், விவிலியம் சார்ந்த பத்திரிகைகள், விவிலிய படக்கதைகள், விவிலிய ஒலி ஒளித் தகடுகள் வாங்கி வீடுகளுக்கு / குழந்தைகளுக்கு விற்பனை செய்யலாம். மறைமாவட்ட பணிக்குழுவிடம் (மறைக்கல்வி / விவிலியம்) நிச்சயமாக இருக்கின்றன.*
8. *விவிலிய மாதத்தில் / வாரத்தில் ஒரு நாள் அல்லது ஒவ்வொரு நாளும் விவிலிய மாலை என்று வைக்கலாம். இதில் மேடைகளில் ஒரு நாள் விவிலியம் சார்ந்த சொற்பொழிவுகள், ஒரு நாள் விவிலிய வினாடி வினா (வயது குழுக்கள்), ஒரு நாள் விவிலிய மனப்பாடம், விவிலிய மாந்தர் மாறுவேடம், ஒரு நாள்*

*விவிலிய நாடகங்கள், ஒரு நாள் விவிலிய மாந்தர், கதைகள் அடங்கிய சினிமாக்கள், ஒரு நாள் விவிலிய சிறப்பு சொற்பொழிவு / கருத்துரை என்று பல விதங்களில் இந்த விவிலிய வாரத்தில் விவிலிய மாலையைச் சிறப்பிக்கலாம்.*

## 2. வருடம் முழுவதும் விவிலியத்தைச் சிறப்பிக்கச் சில பரிந்துரைகள்

- *வீடுகளிலும் நிறுவனங்களிலும் விவிலியத்தை அரங்கேற்றம் செய்தல்.*
- *விவிலிய வழிபாடுகள் மற்றும் குழுத் திருப்பலிகள் கொண்டாடுதல்.*
- *விவிலிய பேட்ஜ், ஸ்டிக்கர் தயாரித்து வழங்குதல்.*
- *இறைவார்த்தைப் பகிர்வுக் குழுக்களை நடத்துதல்.*
- *அன்பியங்களில் விவிலிய நாளைக் கொண்டாடுதல்.*
- *விவிலியத்தைச் சலுகை விலையிலோ, இலவசமாகவோ வழங்க நன்கொடையாளர்களை இனம் காணுதல்.*
- *விவிலியம் பரிசளித்தல், விவிலியம் வங்கி உருவாக்குதல்.*
- *ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் ஒலி பெருக்கி வழியாக இறைவார்த்தையை முழக்கம் செய்தல், விவிலியப் பாடல்களையும், நிகழ்ச்சிகளையும் ஒலி பரப்புதல், விவிலிய வாரக் கொண்டாட்ட நிகழ்வுகளையும் நினைவூட்டி அறிவித்தல்.*
- *விவிலிய விளையாட்டுகள், வினாடி–வினாப் போட்டிகள், விவிலிய கதாபாத்திரங்களாக நடித்தல், விவிலியப் பகுதிகளை மனப்பாடம் செய்து ஒப்பித்தல், விவிலிய நாடகங்கள் நடித்தல் போன்ற போட்டிகளை நடத்துதல். விவிலியக் கண்காட்சிகள் அமைத்தல்.*
- *விவிலியத்தில் உள்ள நபர்கள், இடங்கள், நிகழ்வுகளைக் குறித்து விடுகதை தயாரித்தல்.*
- *கிராமியக் கலைகள் வழியாக (நடனம், கும்மி, கோலாட்டம், மயிலாட்டம், பட்டிமன்றம், ஒயிலாட்டம், வில்லுப்பாட்டு, கதாகாலட்சேபம்) விவிலிய நிகழ்ச்சிகளை வழங்குதல், விவிலியப் பாடல்களைப் (VBS) பயன்படுத்துதல்.*
- *விவிலியத் திரைப்படங்களைத் திரையிடுதல்.*
- *விவிலியக் குடும்பங்களின் பெயர்கள், இறைவார்த்தையில் வாழ்ந்த புனிதர்களின் படங்கள் திரையில் எழுதி அறியச் செய்தல்.*
- *விவிலியக் கதாபாத்திரங்களின் உடை அணிந்து ஆலயத்திற்கு வருதல்.*

- பேனா மற்றும் பரிசுப் பொருள்களில் இறைவார்த்தை Stickers ஒட்டுதல்.
- விவிலிய ஞாயிறன்று சிறப்பான திருப்பலிக் கொண்டாட்டம். நாள் முழுவதும் பல்வேறு போட்டிகள், அன்று மாலை விவிலியக் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல்.
- திருப்பலியில் காணிக்கைப் பவனியின்போது ஏழைகளுக்காக விவிலியப் பிரதிகளைக் காணிக்கையாக அளித்தல்.
- மக்களின் பயன்பாட்டிற்காகக் கோவில்களில் திரு விவிலியங்களை வைத்தல்.
- விவிலிய வசனங்களுக்கு ஏற்ற படம் வரைந்து வசனத்தை எழுதுதல் [திராட்சைச் கொடி – கனிகள்]
- ஒவ்வொரு நாளும் வித்தியாசமான பவனி நடத்துதல். [உ.ம்]
- 1. விவிலியம் ஏந்தி வரல், 2. நற்செய்தியாளர்கள், 3. இறை வாக்கினர்கள் போல உடையணிந்து வரல், 4. பெண் இறை வாக்கினர், 5. விவிலியப் பணிக்குழு, 6. இளையோர், 7. பக்த சபை, 8. தாங்கள் விரும்பும் விவிலிய கதாபாத்திரமாக மாறுவேடம் அணிந்து வரல்.
- விவிலியம் தன் வரலாறு சொல்லுதல்.
- விவிலிய வாரம் முழுவதும் தனக்கு பிடித்த விவிலிய நபர்களின் பெயர்களை சூட்டிக் கொண்டு அவர்களைப் பற்றி மற்றவர்களுக்கு அறிவித்து மகிழ்தல்.
- பங்குகளில், வீடுகளில் விவிலியக் கட்டுரைகளைத் தாங்கி வரும் **[தோழன், விவிலிய விருந்து]** போன்ற பத்திரிகை களுக்கு சந்தாதாரர்களாக சேர்ந்து அவைகளை வருவிப்பது. கட்டுரைகளை வீடுகளில், அன்பியங்களில் விவிலியக் குழுக்களில் வாசித்துப் பகிர்ந்து கொள்வது.
- விவிலியப் பணிக்குழு விவிலிய குழுமங்கள், விவிலிய நண்பர்கள், விவிலிய பணியாளர்கள், தன்னார்வப் பொது நிலையினர்கள் என்று மறைமாவட்ட மற்றும் பங்குத் தளங்களில் விவிலிய மேய்ப்புப் பணிக்கான அமைப்புகளை உருவாக்குவது.
- உருவாக்க நிகழ்வுகள் : விவிலியத்தைப் பற்றிய உரைகள், விவிலிய தலைப்புகளில் உரைகள், விவிலியச் செப வழிபாடுகள், விவிலியம் கற்கும் குழுக்கள், விவிலியப் பகிர்வுக் குழுக்கள், பங்கிலுள்ள சபைகள் மற்றும் குழுக்களுக்கான விவிலியக் கருத்தரங்கு [ஒவ்வொரு மாதமும் ஒரு ஞாயிற்றுக் கிழமை, இளையோருக்கான விவிலிய முகாம்கள்.
- குடும்பத் தலைவர் அல்லது பங்குத் தந்தையின் தலைமையில் இல்லங்களில் விவிலியத்தை நிறுவுதல். குடும்ப செப வேளையிலும், குடும்பக் கொண்டாட்டங்களின் போதும் விவிலியம் வாசித்தல்.

- அக்கம் பக்கமுள்ள குடும்பங்களைச் சந்தித்து விவிலியம் வாசிக்க ஊக்கப்படுத்துவது மற்றும் அவர்களுடைய தேவைகளுக்காக அவர்களோடு இணைந்து செபிப்பது.
- விவிலிய வங்கி தொடங்குதல் : நபர்களிடமிருந்து நன்கொடை பெற்று அல்லது விவிலியப் பிரதிகள் பெற்று, விவிலியம் வாங்க வசதி இல்லாதவர்களுக்கு குறைந்த விலையில் அல்லது இலவசமாக வழங்குதல். ஆளுக்கொரு விவிலியம், நாளுக்கொரு அதிகாரம் என்ற இலக்கை அடைதல் வேண்டும்.
- பிறந்த நாள், புது நன்மை, உறுதிப்பூசுதல், திருமணம் மற்றும் ஜூபிலி கொண்டாட்டங்களின் போது விவிலியத்தை அன்பளிப்பாக வழங்குதல். பள்ளி அல்லது கல்லூரிப் படிப்பை முடித்து செல்லும் மாணாக்கருக்கு விவிலியத்தைப் பரிசாக வழங்குவது. பள்ளி மற்றும் கல்லூரிகளில் விவிலியம் கற்கும் குழுமங்களை உருவாக்குதல். சூழ்நிலைகளைப் பொறுத்து சிறைக் கைதிகளுக்கு விவிலியம் வழங்குதல்.
- பள்ளி செல்லும் பிள்ளைகளுக்கு கோடை விடுமுறையில், விடுமுறை விவிலிய வகுப்புகள் நடத்தலாம்.
- விவிலியத்தின் புத்தகங்களுக்கு விளக்கவுரைகள், முகவுரை தொடர்கள் என இலக்கியங்களாக அச்சிடுதல், மாதாந்திர இதழ்கள், பிரசுரங்கள் என விவிலியத் தலைப்புகளில், விவிலியச் செய்திகளாக வெளியிடுதல், விவிலிய நாள்காட்டி, விவிலிய காலண்டர் போன்றவற்றை வழிபாட்டு வாசகங் களோடு வெளியிடுதல், முழு விவிலியத்தைப் பற்றி அல்லது விவிலியத்தில் உள்ள சில புத்தங்களைப் பற்றி எழுதுதல்.
- அஞ்சல் வழி விவிலிய படிப்புகள் மற்றும் இணையவழி விவிலிய படிப்புகளில் பங்கெடுத்தல். தமிழக விவிலியப் பணிக்குழுவில் ஏற்கெனவே ஏராளமானோர் கலந்து பயன் பெறுகின்றனர். நீங்களும் பங்கு கொள்ளலாம். விவரங்களுக்கு: விவிலியப் பணிக்குழுச் செயலர், முப்பணி மையம் (TNBCLC), திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம் – 604 001. அலைபேசி : 94 87 42 65 80.
- பள்ளி கூடுகையின்போது விவிலிய வசனங்களை வாசித்தல். டிஜிட்டல் திரைகளில் விவிலிய வசனங்களைக் காட்டுவது. விவிலிய நாடகங்கள் மூலம் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் விவிலியம் வாசிக்க ஆர்வத்தை ஏற்படுத்துவது.
- மதம் சார்ந்த மற்றும் மதம் சாரா பத்திரிகைகளில் விவிலியத் தலைப்புகளில் அல்லது விவிலியம் காட்டும் விழுமியங்களில் கட்டுரைகள் எழுதுவது.
- பங்குகளில் அல்லது மறைமாவட்டத்தில் விவிலிய நூலகம் அமைப்பது.
- கொடி ஏற்றி விவிலியக் கொண்டாட்டங்கள் / விழாக்கள் நடத்துவது. விவிலியத் தேர் பவனி, நற்செய்திப் பெருவிழா கொண்டாட்டம், கிராமபுற விவிலியப் பறைசாற்றல்.

- விவிலியம் காட்டும் விழுமியங்கள் மற்றும் தலைப்புகளில் பங்குகளிலும், மறைமாவட்டங்களிலும் தியானங்கள் வழங்குவது.
- இறைவார்த்தையை பறைசாற்றுவது தொடர்பான யுத்திகளோடு, வழிபாடு மற்றும் விவிலியம் பற்றிய அடிப்படை அறிவு கொண்ட வாசகர்களாக பொதுநிலையினருக்கு பயிற்சி அளிப்பது.
- வாட்ஸ் அப், பேஸ்புக், டுவிட்டர், யூடியூப், மின் குழுமம், இணைய தளம், தொலைக்காட்சி சானல்கள் போன்ற சமூகத் தொடர்புசாதனங்கள் மற்றும் சமூக தளங்களை பயன்படுத்துதல்.

  யூடியூப் சானல்கள் மற்றும் கத்தோலிக்கர் தொலைக்காட்சி சானல்கள் வழியாகவும் விவிலிய பகுதிகளைப் பற்றிய ஆடல், பாடல் போட்டிகளை நடத்துவது.
- முடிந்தவரை ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு விவிலியப் புத்தகமாக எடுத்து அன்பியங்களில் விவிலிய வினாடி வினா நடத்துதல். சிறிய பரிசுகள் அன்பியங்கள் சார்பாக வழங்குதல்.
- பங்குகளில் போட்டிகள் நடத்தி பரிசுகள் கொடுக்கும்போது இனி பொருள்களுக்குப் பதிலாக விவிலியம் சார்ந்த பத்திரிகைகளை ஒரு வருட சந்தா, மூன்று வருட சந்தா, ஆயுள் சந்தா என்று ஏற்பாடு செய்து அதையே முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு என வழங்குதல். எடுத்துக்காட்டாக,

**'இனிய தோழன் பத்திரிகை'**
**தோழன் ஆசிரியர்**
**முப்பணி மையம் (TNBCLC)**
**திண்டிவனம் - 604 001**

| | | |
|---|---|---|
| ஒரு வருட சந்தா | - | ரூ. 150 |
| மூன்று வருட சந்தா | - | ரூ. 300 |
| ஐந்து வருட சந்தா | - | ரூ. 450 |
| ஆயுள் வருட சந்தா | - | ரூ. 1500 |

**இனிய தோழன், விவிலிய விருந்து போன்ற பத்திரிகைகளை கட்டாயம் பரிந்துரை செய்யுங்கள்.**

**தோழன் சந்தா அனுப்ப வேண்டிய முகவரி**
**தோழன் டிரஸ்ட்,** TNBCLC,
53/A6 மரக்காணம் ரோடு, தபால் பெட்டி எண். 11
திண்டிவனம் – 604 001. அலைபேசி : 63 81 50 31 06
**காசோலை :** "THOZHAN TRUST"

| | | |
|---|---|---|
| Bank | : | IOB |
| Branch | : | Tindivanam |
| A/C Name | : | Thozhan Trust |
| A/C No | : | 171002000000265 |
| IFSC Code | : | IOBA0001710 |

## பங்குகளில் விவிலியப் பணிக்குழு

### நோக்கம்

ஒவ்வொரு பங்கிலும் விவிலியப்பணிக்குழு உருவாக்குவது தேவை.

### எப்படி உருவாக்குவது?

பங்கில் இருக்கும் சபைகள், இயக்கங்கள், மறைக்கல்விப் பணிக்குழு, வழிபாட்டுப் பணிக்குழு, நற்செய்தி அறிவிப்புக்குழு இவைகளிலிருந்து ஒருவர் அல்லது இருவர் ( பெரிய பங்கு / சிறிய பங்கு இவைகளின் தன்மையைப் பொறுத்து ) பங்கு விவிலியப் பணிக்குழுவின் உறுப்பினராக இருப்பர்.

### விவிலியப் பணிக்குழுவின் பணிகள் என்ன?

1. விவிலியம் எல்லாருக்கும் கிடைக்க வழி செய்யதல்.
2. ஏழை மக்களுக்கு இலவசமாகவும், மலிவு விலையிலும் விவிலியம் வழங்க ஏற்பாடு செய்தல்
3. ஆளுக்கொரு விவிலியம் நாளுக்கொரு அதிகாரம்.
4. அன்பியக்கூட்டங்களில் விவிலியம் கொண்டு வந்து பயன்படுத்த வலியுறுத்தல்.
5. விவிலிய அறிவை வளர்க்கும் விதத்தில் விவிலியக் கருத்தரங்குகள் நடத்துதல்.
6. குழுவாரியாக பங்கு மக்கள் அனைவருக்கும் விவிலியப் பயிற்சி அளித்தல்.
7. கலைவழி இறைமொழி கற்பிக்க கலைநிகழ்ச்சிகளை தயாரித்தல்.
8. ஊடகங்கள் வழியாக விவிலிய விளக்கங்களும் நடத்துதல்.
9. விவிலியம் சார்ந்த விழாக்களைக் கொண்டாடுதல், விவிலிய ஞாயிறு, விவிலிய வாரம், விவிலிய மாதம் கொண்டாடுதல்.
10. விவிலிய ஆளுமைகளை நாடகமாக நடத்துதல் - அதற்காக தயாரித்தல்
11. விவிலிய நாட்குறிப்போடு, விவிலிய சுவரொட்டிகள் வழங்குதல்.

12. அஞ்சல் வழி விவிலியக் கல்வியை பங்கில் துவங்குதல், ஒழுங்குபடுத்துதல்.

13. அஞ்சல் வழி விவிலியம் கற்போரின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

14. விவிலிய வினாடி - வினா நடத்துதல்.

15. ஆண்டிற்கு ஒருமுறை பங்கு அளவில் விவிலிய கண்காட்சி நடத்த ஏற்பாடு செய்தல்.

16. விவிலிய அறிவினை வளர்ப்பதோடு அதனை வாழ்வாக்க பயிற்சிகள் நடத்துதல்.

17. விடுமுறை விவிலியப் பள்ளி நடத்துதல்.

18. பங்குகளில் விவிலிய விளக்க புத்தகங்கள் வாங்கி விவிலிய குழுக்களுக்கு வினியோகித்தல்.

19. திருவழிபாட்டுக் குழுவோடு இணைந்து வாசக பயிற்சியளித்தல்.

20. விவிலிய காணிக்கை பவனி.

21. மற்றும் இக்கையேட்டில் உள்ள பல பரிந்துரைகளை தயவுசெய்து செயல்படுத்தவும்.



# திருவிவிலிய வாரம்
# 20-26 செப்டம்பர், 2021
## விவிலிய வாரத்தில் வரக்கூடிய வார நாள்களுக்கான (20-26) மையக்கருத்துகள், கொண்டாட்ட வழிமுறைகள், திருவழிபாட்டுக் குறிப்புகள்
## (வசதிக்கும் தேவைக்கும் ஏற்ப சிறப்பிக்கும் குழுக்களை மாற்றிக் கொள்க)

விவிலிய வாரத்தில் வரக்கூடிய வார நாள்களுக்கான (20-26) மையக்கருத்துகள், கொண்டாட்ட வழிமுறைகள், சில திருவழிபாட்டுக் குறிப்புகள் ஆகியவற்றை வழங்கியுள்ளோம். சிறப்பிக்கும் குழுக்கள் மையக்கருத்துக்கு ஏற்ற வகையில் பல அர்த்தமுள்ள அடையாளங்களைச் சேர்க்கலாம். பொருத்தமான பாடல்களை முன்கூட்டியே தேர்வு செய்து கொள்க. மன்னிப்பு மன்றாட்டுகளை மையக்கருத்தோடு இணைந்து போகும் வகையில் சேர்த்துக் கொள்ளலாம். நற்கருணை விருந்திற்குப் பின் ஓர் உறுதிமொழி எடுத்துக்கொள்ளலாம். அந்த உறுதிமொழியினையும் அந்தந்த நாளுக்குரிய மையக்கருத்தோடு இணைந்து எழுதி உரக்கச் சொல்வோம். மேலும் உங்கள் படைப்புத் திறன்களுக்கேற்றாற்போன்று திருப்பலிக் கொண்டாட்டத்தை பங்குத்தந்தை, வழிபாட்டுக்குழு, விவிலியப் பணிக்குழு ஆகியோர் இணைந்து திட்டமிட்டு செய்யவும். நன்றி.

## 20.09.2021 - திங்கள்

**மையக்கருத்து** : **இறைவார்த்தை - உலகம் இறைவனின் அழகியப் படைப்பு என்பதை நினைவுபடுத்தும்**

**சிறப்பிக்கும் குழு** : அனைத்துத் திருத்தூதுக் கழகங்கள்

**முதல் வாசகம்** : சீரா 16:26-17:3

**மன்னிப்பு மன்றாட்டு** : சொந்தமாக செபிக்கவும்

**நற்செய்தி வாசகம்** : யோவா 17:4-11

**திருப்பலி முன்னுரை**

உலகு இறைவனின் அதிசய, அழகியப் படைப்பு. இறை வார்த்தைகளினால் உலகு இலவசமாக நமக்குக் கொடுக்கப்பட்டது. நாம் காணும் இந்த அழகிய உலகம் - காண முடியாத அளவுகடந்த வான்வெளி, பரந்து விரிந்த பூமி, ஆயிரம் இரகசியங்களை இதயமாகக் கொண்டிருக்கும் பூமியின் உள்பகுதி. . . எல்லாமே இறைவார்த்தையின் விளைவுகள். . . இறைவார்த்தையின் வளைவுகள். உலகின் அடித்தளங்கள், அமைப்புகள், அண்டங்கள், கோள்கள், கடல்கள், ஆறுகள், அருவிகள், நீர்நிலைகள், மரம் செடி, கொடிகள், காட்டு விலங்குகள், எண்ண முடியாத வண்ண

வண்ணப் பறவைகள் எல்லாமே இறைவார்த்தையின் அழகிய உருவங்கள். இறுதியாக படைப்பின் உச்சக்கட்டமாய் நிற்கும் மனிதன் / மனிதம். இவைகள் இறைத் திட்டத்தின் அறிவும் ஆற்றலும் ஆளுமையுமாகும். எனவே நாம் காணும் இந்த மாபெரும் உலகு முழுவதுமே இறைவார்த்தையின் இமயங்கள். படைப்புகளைக் காணும்போது அந்த இறை வார்த்தையின் சக்தியும் ஆற்றலும் நம் உள்ளத்தில் உயிர்த்தெழட்டும். ஒவ்வொரு நாளும் இந்த அருமை படைப்புக்காக இறைவனுக்கு நன்றி செலுத்துவோம். இறைவனின் மாபெரும் இயற்கை என்னும் கொடைக்கு எதிராக நாம் செய்யும் குற்றங்களுக்காக மனம் வருந்துவோம். 'இயற்கையைப் பேணி இறைவனைப் பேணுவோம்' என்ற சிந்தனையோடு இன்றைய திருப்பலியில் பங்கெடுப்போம்.

**மன்னிப்பு மன்றாட்டுகள் :** மையக்கருத்துக்கு இணைந்து செல்லும் மன்னிப்பு மன்றாட்டுகளை சொந்தமாக செபிக்கவும்.

**நிறைவு உறுதி மொழி :** நற்கருணை விருந்திற்குப்பின் மையக் கருத்தோடு இணைந்து போகும் உறுதி மொழியை எழுதி எல்லாரும் வாசிக்கச் செய்யவும்.

## 21.09.2021 - செவ்வாய்

| | | |
|---|---|---|
| **மையக்கருத்து** | : | **இறைவார்த்தை - உலகம் இறைவனை மையப்படுத்திய ஒரு குடும்பம் என்பதை வலியுறுத்தும்** |
| **சிறப்பிக்கும் குழு** | : | அருள்சகோதரிகள், சிறார் இயக்கங்கள் |
| **முதல் வாசகம்** | : | கலா 4:4-7 |
| **மன்னிப்பு மன்றாட்டு** | : | சொந்தமாக செபிக்கவும் |
| **நற்செய்தி வாசகம்** | : | மாற்கு 12:28-34 |

**திருப்பலி முன்னுரை**

நிலவில் மனிதன் கால்பதித்த போது பூமியிலிருந்து சில பொருட்களையும் அங்கே பதிக்கவிட்டார்கள். கிறிஸ்தவர்களின் ஒட்டுமொத்த புனித நூலாம் திருவிவிலியத்தை எடுத்துச்செல்ல முடியாமல் இருந்தாலும், திருவிவிலியத்தின் உண்மையை, முழுமையை உணர்த்தும் அடையாளமாக எட்டாம் திருப்பாடலை அன்றைய திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்கள் தனது கைப்பட எழுதிக் கொடுத்ததை எடுத்துச் சென்றார்கள். நிலவிலிருந்து பூமியைப் பார்த்து, பூமியின் அழகை அனுபவித்து 8ஆம் திருப்பாடலை வாசித்து நிலவில் வைத்தார்கள். "ஆண்டவரே! எங்கள் தலைவரே! உமது பெயர் உலகெங்கும் எவ்வளவு மேன்மையாய் விளங்குகின்றது!" (திபா 8:1). வானங்கள் இறைவனின் கைவேலைப்பாடு; நிலவு விண்மீன்கள் அதில் பொருத்தப்பட்ட அழகிய வண்ணங்கள். மனிதர் இறைவனின் சாயல். ஆக, இறைவார்த்தை படைப் பனைத்துக்கும் இறைவனே மையம் என்பதை உலகிற்கு அறிக்கையிடுகிறது. இதையே கடவுள் இஸ்ரயேல் மக்களிடம், 'நாமே உங்கள் கடவுள்; நீங்கள்

நமக்கு மக்களாய் இருப்பீர்கள். நம்மைத் தவிர வேறு கடவுள் இல்லாதிருக்கட்டும்' என்கிறார்.

கண்ணுக்கெட்டிய மற்றும் கண்ணுக்கெட்டாத இந்த படைப்புகள் எல்லாவற்றிற்கும் உருவமும் உருவாக்கமும், மூலமும் முழுமையும், நிறைவும் நிலையானதும் அந்த கடவுளே. விவிலியம் முழுவதும் இந்த சிந்தனையைச் சுமந்து செல்கின்றது. நாம் வாசிக்கும், சுவாசிக்கும், விசுவாசிக்கும் இறைவார்த்தை ஒவ்வொன்றும் 'இந்த உலகத்தின் மையம் இறைவனே' என்பதை உணர்த்தட்டும். திருப்பலியில் அர்த்தங்களோடு பங்கெடுப்போம்.

**திருவிருந்திற்குப்பின் நிறைவு உறுதி மொழி**

## 22.09.2021 - புதன்

**மையக்கருத்து** : **இறைவார்த்தை - உறவு தோழமையை வலுப்படுத்தும்**

**சிறப்பிக்கும் குழு** : பங்கின் கல்வி நிறுவனங்கள்

**முதல் வாசகம்** : உரோ 5:1-11

**மன்னிப்பு மன்றாட்டு** : சொந்தமாக செபிக்கவும்

**நற்செய்தி வாசகம்** : மாற்கு 3:31-35

**திருப்பலி முன்னுரை**

மனிதன் மனிதனுக்கு ஓநாய் என்று சொன்னது ஒரு தத்துவம்; ஆனால் மனிதன் மனிதனுக்கு உறவு என்று சொல்வது மனிதத்துவம். மனிதன் என்றால் யார்? இறையியல் - மனிதன் கடவுளின் சாயல் என்று சொல்லும்; சமூகவியல் - மனிதன் ஒரு சமூக விலங்கு என்று சொல்லும்; உளவியல் - மனிதன் உணர்வுகளின் இருப்பிடம் என்று சொல்லும்; பொருளாதாரம் - மனிதன் ஒரு நாணயம் என்று சொல்லும்; கணிதம் - மனிதன் ஓர் எண் என்று சொல்லும்; தத்துவம் - மனிதன் ஒரு சிந்திக்கும் விலங்கு என்று சொல்லும்; அரசியல் - மனிதன் ஓர் ஒட்டு என்று சொல்லும்; வானவியல் - மனிதன் ஒரு விண்மீன் என்று சொல்லும்; ஆனால் **மனிதம்** என்ன சொல்லும்? மனிதர் ஓர் உறவு என்று சொல்லும். மனிதர் இல்லாத படைப்பில் எதோ இருந்தது மிச்சம்; மனிதனை உருவாக்கிய பிறகும் அந்த மிச்சத்திலும் ஒரு மிச்சம் இருந்தது. இருவராகப் படைத்தபின் மிச்சம் நீங்கியது. கடவுளுக்கு மகிழ்ச்சி நிறைந்தது. இதுதான் இறைவார்த்தை முழுவதும் நமக்கு சொல்லித் தருவது. உன் கடவுளாகிய ஆண்டவரை அன்பு செய்; இதே போன்று உன்போல் உன் அயலாரையும் அன்பு செய். இதைவிட வேறு பெரிய கட்டளைகள் இல்லை. கடவுள் மனிதரை உறவாக மட்டுமே பார்த்தார். அதுதான் படைப்பின் நிறைவு. நரகம் - அது 'நான்' மட்டுமே. சொர்க்கம் - அது 'நாம்' என்பதே. இந்த மனித உறவுகளை வலுப்படுத்தும் இறைவார்த்தைகளை உண்டு, உள்வாங்கி வாழ வரவேண்டி இத்திருப்பலியை ஒப்புக்கொடுப்போம். . .

**திருவிருந்திற்குப்பின் நிறைவு உறுதி மொழி**

## 23.09.2021 - வியாழன்

**மையக்கருத்து** : **இறைவார்த்தை - மனித மாண்பைப் பேணிக் காக்கும்**

**சிறப்பிக்கும் குழு** : அனைத்து அன்பியங்கள்

**முதல் வாசகம்** : யாக் 2:1-9

**மன்னிப்பு மன்றாட்டு** : சொந்தமாக செபிக்கவும்

**நற்செய்தி வாசகம்** : லூக் 16:19-26

**திருப்பலி முன்னுரை**

இறைவார்த்தை மனித மாண்பை பேணிக்காக்கும். மனித மதிப்பீடுகளைத் துல்லியமாக கற்றுத்தரும் இனிய புத்தகம் திருவிவிலியம். ஏழை எளியவர்களைக் கண்டாலே முகம் கறுத்து நிற்கும் பல மனிதர்களுக்கு திருவிவிலியம் ஒரு திசை காட்டும் கருவி.

ஏழை லாசர் - செல்வந்தன் உவமையில் (லூக் 16:19-31) மனித மாண்பு சிதைக்கப்படும் போது கடவுளின் அருவறுப்புக்கு செல்வந்தன் உள்ளாவதை பார்க்கிறோம். காரணம் விலை உயர்ந்த மெல்லிய ஆடை அணிந்திருந்தான் செல்வந்தன்; ஏழை மனிதனோ புண்களை ஆடையாக அணிந்திருந்தான்.செல்வந்தன் நாள்தோறும் விருந்துண்டான்; ஏழையோ மேசையிலிருந்து விழும் துண்டுகள் கிடைக்காதா என்று ஏங்கினான். "அடுத்திருப்பாரை இகழ்தல் பாவமாகும்; ஏழைக்கு இரங்குகிறவர் இன்பம் துய்ப்பார்" (நீமொ 14:21) "ஏழையை ஒடுக்குகிறவர் அவரை உண்டாக்கினவரை இகழ்கிறார்; வறியவர்க்கு இரங்குகிறவர் அவரைப் போற்றுகிறார்" (நீமொ 14:31) என்பதை பல பகுதிகளில் இறைவார்த்தை எடுத்தியம்பி மனித மாண்பை பேணிக்காக்க அழைக்கிறது.

ஏழையிடம் வட்டி வாங்காதே (விப 22:25); எந்த இலாபமும் பெற வேண்டாம்; உன் சகோதரர்கள் உன்னோடு வாழட்டும் (லேவி 25:36); தம் பணத்தை வட்டிக்குக் கொடாதவர் ஆண்டவரின் கூடாரத்தில் தங்கிடுவார் (திபா 15:5) என்றெல்லாம் நமக்கு கற்றுத் தரும் இறைவார்த்தை எளியோரையும் வாழ வைக்கும் எண்ணத்துடன் மனித மாண்புக்கான மகத்துவத்தை எடுத்துச் சொல்கிறது.

உயர்ந்தவன் தாழ்ந்தவன் வேறுபாடு பார்க்காமல் அனைவரையும் ஒன்றாய் பார்க்கத் தூண்டுவது இறைவார்த்தை. நாமெல்லாம் கடவுளின் மக்கள் ; எந்த பேதங்களும் நமக்கில்லை என்பதை யாக்கோபு 2 ஆம் அதிகாரம் தெளிவுற எடுத்துரைக்கிறது. மனித மாண்பு சிதைக்கப்படும் போது இறைவாக்கினர்களின் குரல்கள் ஏழைகளின் குரலாக இருந்ததுபோல நமது குரல்களும் நலிந்தோரின் குரலாக ஒலித்து மனித மாண்பைக் கட்டி எழுப்ப இறைவார்த்தையை ஆழமாய் தியானித்து வாழ்வாக்குவோம்.

**திருவிருந்திற்குப்பின் நிறைவு உறுதி மொழி**

## 24.09.2021 - வெள்ளி

**மையக்கருத்து** : **இறைவார்த்தை - பாகுபாடற்ற சமூகத்தைக் கட்டியெழுப்பும்**

**சிறப்பிக்கும் குழு** : மறைக்கல்வி மன்றம்

**முதல் வாசகம்** : கலா 3:27-29

**மன்னிப்பு மன்றாட்டு** : சொந்தமாக செபிக்கவும்

**நற்செய்தி வாசகம்** : லூக் 5:27-32

**திருப்பலி முன்னுரை**

மனிதன் இறைவனின் அழகிய படைப்பு மட்டுமல்ல, மிக அரிதான படைப்பு. வார்த்தையாம் கடவுள் மனித சாயல் ஏற்றது; வெறும் புல்லுக்கு சமமான மனிதர் இறைசாயலை பெற்றது. என்னே ஒரு விந்தை! என்னே ஓர் ஆடம்பரம். மனிதர்களாகிய நாம் கொடுத்து வைத்தவர்கள். இறைசாயலைத் தாங்கும் மாபெரும் வாய்ப்பு பெற்றவர்கள்.

வார்த்தையாம் இயேசு விண்ணைவிட்டு மண் வந்ததும் ஒரு பாகுபாடற்ற சமூகத்தைக் கட்டியெழுப்பவே. அவரது சொற்கள் செயல்கள் அனைத்தும் இதனை நோக்கியேப் பயணித்தன. சாதிகளைத் தூக்கியெறிந்து சமாரியர்களோடுப் பழகினார்; நீர் பருகினார்; உவமைகளில் பாராட்டினார்; தொழுநோய் குணம் பெற்றவர்களில் சமாரியரைத் தூக்கிப் பிடித்தார். சமூகப் பாகுபாடுகளைத் தூக்கியெறிந்து வரிதண்டுவோரின் நண்பரானார். அவர்கள் வீட்டிற்கு விருந்தாளியானார். அவர்களில் ஒருவரை சீடராக்கினார். நாடுகளின் பாகுபாடுகளைத் தூக்கியெறிந்து யாயிர் மகளைக் குணப்படுத்தினார். கனானேயப் பெண்ணின் மகளுக்கு வாழ்வு தந்தார்; நூற்றுவர் தலைவனே சிலுவையடியில் இயேசுவை இறைமகன் என்று சொல்ல வைத்தார். பணத்தின் ஆதிக்க வேர்களை தூக்கியெறிந்து ஏழை - பணக்காரன் வாழ்வை தலைகீழாகப் புரட்டிப் போட்டார். இரு செப்புக் காசுகள் போட்ட பெண்ணே அதிகம் போட்டவள் என்று அதிர்வுகளைக் கொடுத்தார். உங்களிடையே உயர்ந்தோர் - தாழ்ந்தோர் இருத்தலாகாது என்று உரக்கச் சொன்னார். தானே முன்சென்று பாதம் கழுவும் வரைக்கும் பணிந்து பணி செய்தார். இது இயேசு காட்டும் பாகுபாடற்ற சமுதாயம் - நமது அழுக்கான சிந்தனைகளைத் தூய்மையாக்கித் திருப்பலியில் பங்கு கொள்வோம்.

**திருவிருந்திற்குப்பின் நிறைவு உறுதி மொழி**

## 25.09.2021 - சனி

| | | |
|---|---|---|
| **மையக்கருத்து** | : | **இறைவார்த்தை - விடுதலை வாழ்வை உறுதிப்படுத்தும்** |
| **சிறப்பிக்கும் குழு** | : | இளையோர் இயக்கம் / பெற்றோர் |
| **முதல் வாசகம்** | : | எசா 29:17-24 |
| **மன்னிப்பு மன்றாட்டு** | : | சொந்தமாக செபிக்கவும் |
| **நற்செய்தி வாசகம்** | : | லூக் 4:16-20 |

**திருப்பலி முன்னுரை**

கடவுள் மனிதனானார். இது இயேசுவின் பிறப்பில் மட்டுமல்ல. பலநூறு ஆண்டுகளுக்கு முன்னரே எகிப்தில் துன்பப்பட்ட எபிரேய மக்களின் துயரங்களையும், அழுகுரலையும் கேட்ட கடவுள் அப்போதே மனிதப் பாணியில் மனிதர் ஆகிவிட்டார். துன்பங்களை கண்களால் கண்டும், அழுகுரல்களை காதால் கேட்டும், துயரங்களை உள்ளத்தால் உணர்ந்தும் கொண்ட இறைவன் மோசேயிடம் சொன்னது: எகிப்தியரின் பிடியிலிருந்து இம்மக்களை விடுவிக்கப் போகிறேன் என்பதாகும். எனவே விடுதலை என்பது இறைவனுக்குப் பிடித்தமான ஒரு செயல். எங்கெல்லாம் அடக்குமுறையும், அழுத்தங்களும் உள்ளனவோ அங்கெல்லாம் இறைவன் மனிதப் பாணியிலும் இறை ஆற்றலிலும் குறுக்கிடுவார். இத்தகைய ஒரு விடுதலை வாழ்வு விவிலியம் முழுவதும் பரந்து கிடக்கிறது. ஆண்டவருடைய ஆவியைப் பெற்றுக்கொண்ட இயேசுவும், "ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்" என்றார். எனவே கடவுளும் கடவுளின் மகன் இயேசுவும் மனித விடுதலையை விரும்புபவர்கள். அடிமைத் தன்மையை வெறுப்பவர்கள். கடவுளின் பிரதிநிதிகளாகிய நாம் ஒவ்வொருவரும் விடுதலை விரும்பிகளாகவும் விடுதலை செய்பவர்களாகவும் மாற வேண்டும். அதற்கான வரம் கேட்டு திருப்பலியில் பங்கெடுப்போம்.

**திருவிருந்திற்குப்பின் நிறைவு உறுதி மொழி**

# விவிலிய ஞாயிறு
# 26.09.2021
# சிறப்புத் திருப்பலி

## மையக்கருத்து:
## இறைவார்த்தை - சமூக சகோதரத்துவத்திற்கு ஓர் அழைப்பு

*(குறிப்பு : முடிந்தவரை தேதி மாற்றம் இன்றி கொண்டாடுவோம். தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையில் தேதி மாற்றம் தேவைப்படின் மக்களுக்கு அறிவிப்புக் கொடுக்கவும். சுவரொட்டியிலும் மாற்றம் செய்து கொள்ளவும்).*

## தயாரிப்புக்கு உதவியாகச் சில பரிந்துரைகள்

அ. *பங்கின் விவியிலியப் பணிக்குழு, திருவழிபாட்டுப் பணிக்குழு மற்றும் இளைஞர் குழுக்களை உள்ளடக்கிய விவிலிய நிகழ்வுகள், விவிலிய வார்த்தைகள், விவிலிய குறிப்புகள் அடங்கிய படங்களால், வண்ணங்களால் ஆலயம் மற்றும் சுற்றுப்புறங்களை அழகுபடுத்திடுக.*

ஆ. *திருப்பலிக்கு முன் சிறப்பான திருவிவிலியப் பவனி ஒன்றுக்கு ஏற்பாடு செய்திடுக.*

இ. *சலுகை விலையில் விவிலியப் பிரதிகள் வழங்க ஆவன செய்திடுக.*

ஈ. *விவிலிய ஞாயிறு சிறப்புக் காணிக்கைக்கு நினைவூட்டிடுக.*

உ. *எல்லாரும் பாடி, திருப்பலியில் பங்கேற்கும் வண்ணம் பாடல்களைத் தேர்வு செய்திடுக.*

ஊ. *விவிலிய வார நிறைவுக் கொண்டாட்டத்தை மக்கள் பெருமளவில் பங்கேற்கும் வண்ணம் தயாரித்து நடத்திடுக.*

## திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்புமிக்கவர்களே!

‘தனித்திரு. . . விலகியிரு. . . வீட்டிலேயே இரு” என்று கொரோனா தொற்றுச் சூழலில் அரசு நமக்கு வழிகாட்டுகிறது. நன்றி. தனித்து

இருந்தாலும் நாம் தனிமையில் தள்ளப்படவில்லை; விலகியிருந்தாலும் நாம் விலக்கப்படாமல் உள்ளோம்; வீட்டிலேயே இருந்தாலும் விட்டுவிடப்படவில்லை. இதற்கு வழிகாட்டி அழைப்பு விடுப்பதுவே இறைவார்த்தை. மனிதர்களுக்கு 'மதம்' தந்து கூறுபோடாமல் மனிதர்களை மனித நேயத்தோடு கூடிவரவும் ஓடிவரவும் அழகும் அழைப்பும் கொடுப்பதுதான் இறைவார்த்தை.

உலகைப் படைத்த வார்த்தையே உறவையும் படைத்தது. மண் இன்றி மரம் இல்லை என்பதால் முதலில் மண்ணை - உறவைப் படைத்தார். நீர் இன்றி மீன் இல்லை என்பதால் முதலில் நீரை - உறவை படைத்தார்; வளி இன்றி ஒளி இல்லை என்பதால் முதலில் வளி மண்டலத்தை - உறவைப் படைத்தார். பெண்ணின்றி ஆணில்லை, ஆணின்றி பெண்ணில்லை என்பதால் மனிதர்களை உறவாக, இணையாக, துணையாகப் படைத்தார். இவ்வாறு உறவுக்கு உயிரும், உயிருக்கு உறவும் தேவை என்பதை படைப்பிலேயே அமைத்து விட்டார்.

'நான் என்ன என் சகோதரனுக்குக் காவலாளியா?' என்று காயின் கேட்ட கேள்வி கடவுளுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் இருந்தது. மனிதருக்கு மனிதர் சகோதரர் - சகோதரி, காவலாளி என்பதற்காகத் தான் கடவுள் மனிதர்களைப் படைத்தார். இந்த வேள்வி தெரியாமல் கேள்வி கேட்டதால் வெந்து போனது கடவுளின் மனம். விலைமதிக்க முடியாதவை நம்மிடம் இருப்பவை அல்ல, நம்மிடம் இருப்பவர்கள் என்ற சிந்தனையோடு வாழ்வைப் பார்க்கத் தொடங்குவோம்.

மனிதர்களைப் பிரிக்கும் சாதி, மத, மொழி, இன பாகுபாடுகள் உறவுப் பாலங்களுக்குப் பதிலாக பிரிக்கும் சுவர்களே. எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக என்ற நோக்கமும் ஏக்கமும் இயேசுவின் மூச்சிலும் பேச்சிலும் இருந்தது. ஆண்டவர் இயேசுவின் இறுதி மூச்சை இலக்கு மூச்சாகக் கொண்டு மானுடம் வாழ வரம் கேட்டுத் திருப்பலியில் இணைவோம்.

*(இன்று 26.09.2021 தேவைப்படும் திருக்குழும மன்றாட்டு, காணிக்கை மீது மன்றாட்டு, நன்றி மன்றாட்டு ஆகியவற்றைத் திருப்பலிப் புத்தகத்தில் பொதுக்காலம் 26ஆம் ஞாயிறுக்கு உரிய பகுதியைப் பயன்படுத்தலாம். இல்லையேல் இம்மடலில் உள்ள மன்றாட்டுகளைப் பயன்படுத்தவும்).*

## வருகைப் பாடல்

### பொருத்தமான திருவிவிலியப் பவனி பாடல்

*(கோவில் முகப்பிலிருந்து திருவிவிலியத்தைப் பவனியாக எடுத்து வரலாம். பவனி திருவிவிலியத்தின் மேன்மையை எடுத்துரைக்கும் விதத்தில் அமைவது சிறப்புரிக்குரியது. அப்போது பாடப்படும் பாடலை எல்லாரும் பாடும் விதத்தில் முன் தயாரிப்புச் செய்து கொள்வது நல்லது. பவனிப் பாடலாகத் தேர்வு செய்து பாடவும். பவனி பீடத்தை அடைந்ததும். . . விவிலியத்தை அலங்கரிக்கப்பட்ட இடத்தில் வைக்கவும்).*

## விவிலிய அரங்கேற்றம்

*(3 பேர் பின்வரும் இறைவார்த்தைகளை உரக்கச் சொல்லவும்)*

1. *"உன் சொற்கள் எனக்கு மகிழ்ச்சி தந்தன: என் உள்ளத்திற்கு உவகை அளித்தன. ஏனெனில் படைகளின் ஆண்டவரே, உம் பெயரே எனக்கு வழங்கலாயிற்று" (எரே 15:16) என்று முழங்குவார் இறைவாக்கினர் எரேமியா.*
2. *நற்பேறு பெற்றவர் யார்? அவர் பொல்லாரின் சொல்லின்படி நடவாதவர் பாவிகளின் தீய வழி நில்லாதவர்; இகழ்வாரின் குழுவினில் அமராதவர் (திபா 1:1).*
3. *ஆண்டவரது வாக்கினால் வானங்கள் உண்டாயின; அவரது சொல்லின் ஆற்றலால் வான்கோள்கள் எல்லாம் உருவாயின. அனைத்துலகும் ஆண்டவருக்கு அஞ்சுவதாக; உலகில் வாழ்வோர் அனைவரும் அவருக்கு அஞ்சி நடுங்குவராக (திபா 33:6, 8)*

## விவிலிய அஞ்சலி

*(தீப, தூப, மலர் அஞ்சலி + பொருத்தமான பாடல்)*

## விவிலிய அஞ்சலிக்குப்பின்

தொன்மைமிகு பாரம்பரியத்தின்படி திரு அவை நம் ஆண்டவரின் திருவுடலுக்கு வணக்கம் செலுத்துவது போலவே இறைவார்த்தைக்கும் என்றும் வணக்கம் செலுத்தி வந்துள்ளது. ஆகவே இப்போது நாம் இறைவார்த்தைக்கு நமது மரியாதையைக் காட்டும் வண்ணம் சிரம் தாழ்த்தி கரம் குவித்து வணங்குவோம்.

## திருப்பலி தொடக்கம்

தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே. ஆமென்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும் தூய ஆவியின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக. உம் ஆன்மாவோடும் இருப்பதாக.

## மனத்துயர் மன்றாட்டு (சொந்தமாகச் செய்யவும்)

**உன்னதங்களிலே கடவுளுக்கு. . .**

## திருக்குழும மன்றாட்டு

என்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா! வார்த்தை மனுவுருவாகி எங்களிடையே குடிகொண்டார் என்பதை உமது திருமகனின் பிறப்பின் மூலம் அறிவித்தீரே! அவரது வார்த்தைகள் இவ்வுலக மக்களை சாவிலிருந்து வாழ்வுக்கும், இருளிலிருந்து ஒளிக்கும், அறியாமை யிலிருந்து அறிவுக்கும் கடத்திச் சென்றதை நினைத்து மகிழ்கின்றோம். எங்கள் இறைவார்த்தைப் பணியிலும் உம் திருமகனின் பணிகள் முழுமையாகிட அருள்புரிவீராக. உம்மோடு தூய ஆவியாரின் ஒன்றிப்பில் இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவரும் உம் திருமகனுமாகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

## வார்த்தை வழிபாடு

### முதல் வாசக முன்னுரை: தொநூ 4:8-15

தனித்த மனிதன் இறைவனுக்கே சலிப்பு; இணைந்த மனிதர்கள் இறைவனுக்கு களிப்பு. மனிதர்களை தோழமையாய் படைத்ததுவே இறைவனது ஓய்வு. இறைவனின் இந்த ஓய்வைக் கலைத்ததே ஒரு சகோதரன் தனது சகோதரனைக் கொன்றதுதான். சிந்தப்படும் சகோதர இரத்தம் கடவுளின் ஓய்வையே கலைத்துவிடும். படைப்பின் தொடக்கத்தில் மனிதர்களை தோழமையில் படைத்த இறைவனின் ஓய்வை குலைத்த காயின் - ஆபேல் சகோதரக் கொலை நிகழ்வை வாசிக்கக் கேட்போம்.

### பதிலுரைப் பாடல்: திருப்பாடல் 25:4-5, 6-7, 8-9

(இதனைப் பாடிச் செபிக்கலாம்)

**பதிலுரை : ஆண்டவரே, உம் பாதைகளை நான் அறியச் செய்தருளும்**

ஆண்டவரே, உம் பாதைகளை நான் அறியச் செய்தருளும்; உம் வழிகளை எனக்குக் கற்பித்தருளும்; உமது உண்மை நெறியில் என்னை நடத்தி எனக்குக் கற்பித்தருளும்.

**பதிலுரை : ஆண்டவரே, உம் பாதைகளை நான் அறியச் செய்தருளும்.**

ஆண்டவரே, உமது இரக்கத்தையும் உமது பேரன்பையும் நினைந்தருளும்; ஏனெனில், அவை தொடக்கமுதல் உள்ளவையே. உமது பேரன்பிற்கேற்ப என்னை நினைத்தருளும்; ஏனெனில் ஆண்டவரே நீரே நல்லவர்.

**பதிலுரை : ஆண்டவரே, உம் பாதைகளை நான் அறியச் செய்தருளும்.**

ஆண்டவர் நல்லவர்; நேர்மையுள்ளவர்; ஆகையால், அவர் பாவிகளுக்கு நல்வழியைக் கற்பிக்கின்றார்; எளியோரை நேரிய வழியில் அவர் நடத்துகின்றார்; எளியோருக்குத் தமது வழியைக் கற்பிக்கின்றார்.

**பதிலுரை : ஆண்டவரே, உம் பாதைகளை நான் அறியச் செய்தருளும்.**

**இரண்டாம் வாசக முன்னுரை: உரோ 12:9-21**

கிறிஸ்தவ வாழ்வுக்கென்று சில நெறிமுறைகள் உண்டு. இயேசு மலைப்பொழிவில் சொன்னவைகளே அந்த அழகான நெறிமுறைகள். பவுல் தான் சந்தித்த மக்களுக்கு இந்த அறநெறிகளைக் கற்பித்தார்; தொடர்ந்து எழுதினார்; அடிக்கடி நினைவூட்டினார். அவரது கற்பித்தல் நெறியின் ஒரு பகுதியான உரோமையருக்கு எழுதிய திருமடலில் பவுல் கூறும் கிறிஸ்தவ அறநெறிகளை வாசிக்கக் கேட்போம்.

**வாழ்த்தொலி**

**அல்லேலூயா**

அல்லேலூயா (3)! "ஆண்டவரின் வாக்கு நேர்மையானது; அவருடைய செயல்கள் எல்லாம் நம்பிக்கைக்கு உரியவை" அல்லேலூயா (3).

**நற்செய்தி வாசகம் : மாற் 1:32-39**

## மறையுரைக் குறிப்புகள்

### இறைவார்த்தை - இயேசு - எல்லாருக்கும் சொந்தம்

✶ வார்த்தை மனுவுருவானார். நம்மிடையே குடிகொண்ட அந்த வார்த்தையே ஆண்டவர் இயேசு.

✶ ஒவ்வொரு இறைவார்த்தையும் இந்த உலகம் ஒரு குடும்பம், சகோதரத்துவ சமூகம் என்பதை நிரூபிக்கிறது. விவிலியத்தின் வார்த்தைகள் எல்லாம் உலகம் ஒரு சகோதரத்துவத்தின வெளிப்பாடு என்பதை நோக்கியேப் பயணிக்கிறது. இதில் இறைவார்த்தைக்குப் பெருமை; அதை வாசிக்கும், சுவாசிக்கும், விசுவாசிக்கும் நம் அனைவருக்கும் மகிழ்ச்சி.

✶ இறைவார்த்தை - உலகம் முழுவதுக்கும் சொந்தம். எனவேதான் அந்த வார்த்தையின் பிறப்பில், "இதோ! எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்று வானதூதர் அறிக்கையிட்டார்.

### இயேசு எல்லா நேரமும் முழுமையான அர்ப்பணம்

♦ தூங்குவதற்கும், உண்பதற்கும் கூட அவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை.

♦ மாலை வேளையில் கதிரவன் மறையும் நேரத்தில்கூட மக்கள் நோயாளர்கள், பேய்பிடித்தவர் அனைவரையும் அவரிடம் கொண்டு வந்தார்கள் (மாற் 1:32).

♦ விடியற்காலைக் கருக்கலில் மக்கள் அவரைத் தேடினார்கள் (மாற் 1:36). எனவே நேரம் ஆண்டவர் இயேசுவை அடிமைப்படுத்தவில்லை. அவர் நேரங்களைத் தாண்டியவர்; காரணம், நேரங்களைத் தாண்டி

மனித நேயங்களை விரும்பினார். அவரைப் பொறுத்தவரை மனிதம் ஒரு சகோதரத்துவம்.

### எல்லா மாநிலங்களுக்கும் முழுமையான அர்ப்பணம்

- நாம் அடுத்த ஊர்களுக்கும் போவோம். . . அங்கும் நான் நற்செய்தியைப் பறைசாற்ற வேண்டும் (மாற் 1:18).
- கலிலேயா நாடு முழுவதும் கலக்கினர் (மாற் 1:39)
- யூதேயா தொழுகைக்கூடங்களில் நற்செய்தியைப் பறைசாற்றினார் (லூக் 4:44).
- பெருந்திரளான மக்கள் தீர், சீதோன் பகுதிகளிலிருந்தும் வந்திருந்தார்கள். அவர் சொல்வதைக் கேட்கவும் தங்கள் பிணிகள் நீங்கி நலமடையும் வந்திருந்தார்கள் (லூக் 6:17-18). சமாரியர் களுக்கும் இயேசுவின் பணி அர்ப்பணம் இருந்தது (யோவா 4:4,5). அவரைப் பொறுத்தவரை மனிதம் ஒரு சகோதரத்துவம்.

### எல்லாவித நோய்களுக்கும் / மனிதர்களுக்கும் அர்ப்பணம்

- பலவகையான நோய்கள். . . தொழுநோய், காய்ச்சல், அசுத்த ஆவி, நடக்க, பேச, கேட்க, பார்க்க முடியாதோர் என்று நோய்கள் நோயாளிகள் பலவிதம். அனைவருக்கும் ஆண்டவர் இயேசு அர்ப்பணம். அவரைப் பொறுத்தவரை மனிதம் ஒரு சகோதரத்துவம்.

### அனைத்து இடங்களிலும் அர்ப்பணம்

- வீடு, தெரு, கோயில், குளம், நகரவாயில், நகருக்கு வெளியே, பாழ்வெளி என்று பல இடங்களிலும் அர்ப்பணம். சில நேரங்களில் இவர் அர்ப்பணத்தைப் பார்த்து வீடுகள் கூட விதிவிலக்கியது. வீடுகள் கூட தங்கள் எல்லையினை - கூரையினை உடைத்துக் கொடுத்தன (மாற் 2:4). சகோதரத்துவம் என்றதுமே கடல்கூட விரிந்து கொடுத்தது (மாற் 4:35-41). சகோதரத்துவம் என்றதும் சாதிகள் கூட செத்துப் போனது. அவரைப் பொறுத்தவரை மனிதம் ஒரு சகோதரத்துவம்.

### இறைவார்த்தை - இயேசு - எல்லைகளையும் தொல்லைகளையும் தாண்டும்

- பேய்பிடித்த பலரை இயேசுவிடம் கொண்டு வந்தனர். பேய்களை அவர் பேசவிடவில்லை. பேசினால் கூட, “எங்களை ஒழித்து விடவா வந்தீர்” என்றுதான் கேட்டன. பேய்களை ஓட்டினார்; பல்வேறு பிணிகளால் வருந்திய பலரைக் குணப்படுத்தினார். ‘பெயல் செபூல்’ என்ற பழிச்சொல்லையும் தாண்டினார். “நாம் அடுத்த ஊர்களுக்குப் போவோம், வாருங்கள். அங்கும் நான் நற்செய்தியைப் பறைசாற்ற வேண்டும்” என்றார். மனித எல்லைகள் எதுவும் ஆண்டவருக்குத் தொல்லைகள் தரவில்லை. மனித விமர்சனங்கள் எதுவும் சகோதரத்துவம் பேணும் இயேசுவை சாய்க்க முடியவில்லை. இலவம் பஞ்சுகள் சேர்ந்து இமயத்தை சாய்க்க முடியுமா? அவரைப் பொறுத்தவரை மனிதம் ஒரு சகோதரத்துவம்.

## இறைவார்த்தையும் - சமூக சகோதரத்துவமும்

- மனிதனின் படைப்பு, கடவுளின் சாயல், கடவுளின் மாண்பு - இவைகள் சகோதரத்துவத்தின் மையம்.
- பிறருடைய துன்பங்களில் பங்கெடுத்த கடவுள் சகோதரத்துவத்தின் அடுத்த மையம் (விப 3:7-8).
- ஒரு மனிதனின் இரத்தம் அநீதமாகச் சிந்தப்படும்போது ஆவேச கோபம் கொண்டு எழுந்தார் கடவுள் (தொநூ 4:10).
- எங்கெல்லாம் எப்பொழுதெல்லாம் ஏழைகள், அனாதைகள், கைவிடப் பட்டோர் அழுத்தப்பட்டார்களோ அங்கெல்லாம் குரல் கொடுத்தவர் இறைவன்; அநீதி செய்தவர்களின் குரல்வளையை நெரித்தவரும் இறைவன். கடவுளைப் பொறுத்தவரை, இறைவார்த்தைகளைப் பொறுத்தவரை மானுடம் - ஒரு சகோதரத்துவம்.

## இன்றைய சூழல்

- துன்பம் வரும்போது தன்னை மட்டும் காத்துக் கொள்ள விரும்புபவன் கடவுளுக்கும் கடவுளின் வார்த்தைக்கும் எதிரானவன்.
- “நீ தனியாக மோட்சம் சென்றால் கடவுள் உன்னிடம் ஒரு கேள்வி கேட்பாராம்: உன் சகோதரி, சகோதரன் எங்கே? என்று தத்துவயியலார் பாஸ்கல் கூறுகிறார்.
- இந்தக் கொரோனா காலத்தில் எவரும் ‘தன்னை மட்டும் காப்பாற்றிக் கொள்ள இயலாது’ என்ற பாடத்தை நாம் கற்றுக்கொண்டுள்ளோம். எப்போதும் அதைக் கற்றுக்கொள்வோம்.
- “புறக்கணிப்பு, தன்னலம், பிரிவினை, மறதி போன்ற சொற்கள், இன்றைய சூழலில் நமது காதுகளில் ஒருபோதும் ஒலிக்காத வண்ணம் ஒழிந்து போகவேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்” - திருத்தந்தை பிரான்சிஸ்.
- “நம்மைச் சூழ்ந்து நடக்கும் அத்தனை நிகழ்வுகளும் நம்மை ஒட்டு மொத்தமாக உலுக்கி எடுக்க வேண்டும். அப்படி உலுக்கி எடுக்கப்படும் போது மனிதர்களாகிய நாம் எல்லாரும் ஒரு தாய்ப் பிள்ளைகள் என்பதை அறிந்துணர்ந்து ஒருவரையொருவர் தாங்கிப் பிடிக்க வேண்டும்” - திருத்தந்தை பிரான்சிஸ்.
- பிரிவினை உருவாக்கும் சாதி, பாலின வேறுபாடு, சமயப் பிரிவினை, சமத்துவமற்ற பொருளாதாரம் ஆகியவற்றை இறை வார்த்தை ஒட்டுமொத்தமாக எதிர்க்கிறது.
- காரணம் என்ன? இறைவார்த்தையே மனுவுருவாய் நம்மிடையே தங்கியது. தங்கியவருக்கு இந்த பிரிவுகளும், பிளவுகளும் பிடிக்காது. அவருக்கு பிடிக்காததைச் செய்வது கிறிஸ்தவம் அல்ல. ஆமென்.

## இறைமக்கள் மன்றாட்டுகள்

**பதிலுரை :** *அருள்கூர்ந்து, அருள்கூர்ந்து ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

**1. திரு அவையின் பாதுகாவலரே இறைவா!**

உடைபட்டு, வலுவிழந்த உலகிற்கு திரு அவை உமது ஆற்றல் மிகுந்த இறைவார்த்தையை எடுத்துரைக்க வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறுகின்றோம். உம் திருமகன் இயேசுவை உள்ளார்ந்த நேர்மையோடும் உண்மையோடும் எடுத்துரைக்கவும், அவரையே முழுமையாகப் பிரதிபலித்து வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**2. வாழ்வுதருகின்ற வல்லவரே இறைவா!**

விவிலிய மறைப்பணி செய்கின்ற எங்கள் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், அருள்பணியாளர்கள், துறவியர், பொதுநிலையினருக்காக வேண்டுகின்றோம். இவர்கள் செய்கின்ற பணியில் இறை வார்த்தையின் வலிமை துன்புற்றோருக்கு ஆறுதலாகவும், துவண்டு கிடப்போருக்கு ஆற்றலாகவும் மாறிட வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

**3. நலன்களுக்கெல்லாம் நல்ல தந்தையே இறைவா!**

கொரோனா கொடுந்தொற்று நோயிலிருந்து உலகு முழுவதையும் விடுவித்தருள உம்மை வேண்டுகின்றோம். பாதிக்கப்பட்டு துன்புறும் அனைத்து மக்களும் வெகுவிரைவில் முழுமையான நலம் பெறவும் கொரோனா நோயினால் தங்கள் உறவுகளை இழந்த அனைத்து உள்ளங்களுக்கும் முழுமையான ஆறுதலையும், உயிர் நீத்த அனைத்து மக்களுக்கும் நிலையான வாழ்வையும் தந்தருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

**4. வழிகாட்டும் இறைவா!**

தேசிய விவிலியப் பணிக்குழுவிற்காகவும் மாநில விவிலியப் பணிக் குழுவிற்காகவும், மறைமாவட்ட மற்றும் பங்கு விவிலியப் பணிக் குழுக்களுக்காகவும் உம்மை வேண்டுகின்றோம். இப்பணிக்குழுக்கள் இறைவார்த்தையின் சக்தியை எல்லா மக்களுக்கும் குறிப்பாக வார்த்தையிலிருந்து வெகுதூரத்திலிருக்கும் இளைஞர்களுக்கு இன்னும் வெகு சிறப்பாக அறிவித்திட வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

**5. புலம்பெயர்ந்தோரின் பாதுகாவலே இறைவா!**

புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகளின் துன்பங்களை திருக் குடும்பத்தின் துன்பங்களோடு இணைத்து வாழ்வில் பொருள் காண

அருள்தாரும். இழந்த உறவுகளை தேடும் பயணத்தில் இவர்கள் கிறிஸ்துவைக் காணவும் நல் இதயம் கொண்ட மக்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் வழியாக இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளவும் வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்

*(தேவைக்கு ஏற்பத் தனிப்பட்ட மன்றாட்டுகளையும் சேர்த்துக் கொள்க)*

**மன்றாடுவோமாக.**

இரக்கமுள்ள தந்தையே! கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள் என உமது மகன் வாக்களித்தாரே. அவரது வாக்குறுதிகளில் நம்பிக்கை வைத்து, நாங்கள் வாழ எங்கள் செபங்களையும், மன்றாட்டுகளையும் உம்மிடம் சமர்ப்பிக்கிறோம். எல்லா நேரத்திலும் உமது வார்த்தை மீது நம்பிக்கை வைத்து எங்கள் வாழ்வைத் தொடர கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம் - ஆமென்.

## காணிக்கைப் பவனி

‘கொடுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்’ என்று கூறிய நம் ஆண்டவரின் குரலைக் கேட்டு நமது பங்கில், மறைமாவட்டத்தில், தமிழகத்தில் திருவிவிலியப் பணிகள் சிறப்பாக நடைபெறும் விதத்தில் நம் உள்ளக் காணிக்கைகளை உவப்புடன் அளிப்போம். விவிலிய ஞாயிறு சிறப்புக் காணிக்கைகளைத் தாராள மனத்துடன் நாம் அளிப்பதன் வழியாக விவிலியப் பணிகளுக்கு நமது பங்களிப்பை வெளிப் படுத்துகிறோம், அதிகப்படுத்துகிறோம் என்பதை உணர்வோம்.

விவிலிய வங்கி தொடங்கி, அதற்குரிய விவிலியங்கள் காணிக்கையாக கொண்டு வரப்படலாம். இன்றிலிருந்து பங்குகளில் தொடங்கப்படும் இந்த விவிலிய வங்கி தொடர இக்காணிக்கைப் பவனி முதன் முயற்சியாகட்டும்.

*(பவனியின்போது அடையாளக் காணிக்கைகள் என்ற பெயரில் கோவிலுக்கு, பங்கிற்கு, மக்களுக்குப் பயன்படாதபொருள்களை வழங்குவது தவிர்க்கப்படுகிறது). மாறாக,*

- மலர்கள்
- மெழுகுத் திரிகள்
- விவிலியப் பிரதிகள்
- ஏழைகளுக்கு உதவும் கெட்டுப் போகாதபொருள்கள்
- கல்வி சம்மந்தப்பட்ட பொருள்கள்
- இறைவார்த்தை அட்டைகள்
- கோவிலுக்கு உதவும் பொருள்கள்

- ☛ அப்ப, இரசக் காணிக்கைகள்
- ☛ விவிலிய வாரக் காணிக்கைகள் (Covers with Money) ஆகியவை வழங்கப்படலாம்.

## நற்கருணை வழிபாடு

### காணிக்கைமீது மன்றாட்டு

என்றும் வாழும் தந்தையே இறைவா! உமது வார்த்தை மனுவுருவாகி இந்த உலகை வாழவைக்கும் மேலான உமது செயலை நினைத்து நன்றி கூறுகின்றோம். நாங்கள் உமக்கு நேர்ந்தளிக்கும் இக்காணிக்கைகள் எங்களிடையே சகோதர உறவை வளர்க்கவும் வலுப்படுத்தவும் வேண்டுகின்றோம். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

### திருவிருந்துக்குப்பின் மன்றாட்டு

வாழ்வு தரும் அன்புத் தந்தையே இறைவா! வார்த்தையாலும் உணவாலும் எங்களுக்கு ஒவ்வொரு நாளும் நீர் கொடுக்கும் வாழ்வை நினைத்து மகிழ்வோடு உமக்கு நன்றி செலுத்துகின்றோம். நாங்கள் பெற்றுக் கொண்ட இந்த கொடைகள் நலிந்து கொண்டிருக்கும் மனித நேயத்தையும், தேய்ந்து கொண்டிருக்கும் மனித சகோதரத்துவத்தையும் வலுப்படுத்துவதாக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

### சிறப்பு ஆசீர்

**அருள்பணி : இறை ஆசி பெறத் தலை வணங்கி மன்றாடுவோம்**

1. எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவன் உங்களின் எல்லா முயற்சிகளிலும் உடனிருந்து, உங்கள் கால் இடறாதபடி காத்தருள்வாராக...
2. உலகை அன்பு செய்ய, விண்ணிலிருந்து மண்ணகம் வந்த திருமகன் இயேசு தன் ஆற்றல்மிகு வார்த்தைகளால் உங்கள் வாழ்வைச் சீர்படுத்துவாராக.
3. புதுப்பிக்கும் தூய ஆவியாராகிய இறைவன் உங்களின் துன்பத்தில் உங்களுக்குத் துணையாகவும், இன்பத்தில் இணையாகவும் இருந்து உங்களுக்கு முன்பு வழிகாட்டியாகவும், பின்பு பாதுகாவலராகவும் இருப்பாராக.

எல்லாம் வல்ல இறைவன் ✠தந்தை, மகன், தூய ஆவி உங்களுக்கு ஆசி வழங்குவாராக. ஆமென்.

ஆண்டவருடைய நற்செய்தி அறிவிக்கச் சென்று வாருங்கள், திருப்பலி நிறைவேறிற்று. இறைவனுக்கு நன்றி.

**இறுதிப் பாடல்**

> ***விவிலிய வாரம், விவிலிய ஞாயிறு திருவழிபாட்டுக் குறிப்புகள் தயாரிப்பு.***
>
> ***தமிழக ஆயர் பேரவையின் விவிலியப் பணிக்குழு, முப்பணி மையம், திண்டிவனம்.***


**அருள்பணி. M. உபால்டு,**

*பொதுச் செயலர்,*

*தமிழக விவிலியப் பணிக்குழு,*

*முப்பணி மையம், திண்டிவனம்*


உண்மையானதும் மிக உன்னதுமான ஒரு கடவுள் எனில் அது விவிலியக் கடவுளாகத்தான் இருக்க முடியும். அதை இப்போது வாழும் இந்த மனித குலம் புரிந்து கொண்டிருக்கிறது. **- மாத்யூ அர்னால்டு**

திருநூல் என்பது ஓடிக்கொண்டிருக்கும் ஒரு நீரோடைக்குச் சமம். இந்த நீரோடையில் தங்கள் கால்களை இழக்காமலேயே யானையும் நீந்திச் செல்லலாம்; ஆடும் நடந்து செல்லலாம். ***- திருத்தந்தை பெரிய கிரகோரி***

இறைவனின் திருநூல்களே உலகின் மிகச்சிறந்த தத்துவ நூலாக நாம் கொள்கின்றோம். உலகின் பிற வரலாற்றை விடவும் விவிலியத்தில்தான் நம்பகத்தன்மையின் பதிவுகள் அதிகமாக உள்ளன. ***- சர் ஐசக் நியூட்டன்***

பேராசை கொண்ட என்னுடைய, சீசருடைய, அலெக்சாண்டருடைய கனவுகள் எல்லாம் காற்றில் கரைந்து முடிந்திருக்க வேண்டும். ஆனால் ஒரு சாமானிய யூதன் இயேசுவோ நூற்றாண்டுகளாக உலக நாடுகளில் எல்லா மனிதர்களின் இலக்குகளை தன் நீட்டிய இரண்டு கரங்களால் வழிநடத்திக் கொண்டிருக்கிறார்.

**- பேரரசர் நெப்போலியன்**

உங்கள் கனிவான கவனத்திற்கு. . .

**உங்கள் பணித்தளங்களில் செப்டம்பர் மாத 'இனிய தோழன்' இதழை வாங்கி வாசிக்கச் செய்ய அன்புடன் வேண்டுகின்றோம் மற்றும் இனிய தோழன் இதழுக்கு சந்தாதாரர் ஆகுங்கள்.**


தயாரிப்பு

**செயலர், தமிழக விவிலியப் பணிக்குழு**
**முப்பணி மையம், திண்டிவனம் – 604 001**

வெளியீடு

**இயக்குநர், முப்பணி மையம்,**
**திண்டிவனம் - 604 001.**


